முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்131/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி- 1 முத்துசாமி திரு.ஆர்.ஞானசேகரன் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துசாமி | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மாரியப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 65 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். எனது தொழில் விவசாயம் ஆகும். தாவா வழக்கின் பரிகாரம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இந்நாள் வரை வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண். தெரியுமா என்றால் சர்வே எண்.10G ஆகும். 10 G என்பது உட்பிரிவு ஆகும். அதன் சர்வே எண். தெரியவில்லை. முத்துசாமி, குட்டியப்பன், வீரம்மாள் ஆகியோர் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் முத்துசாமியா என்றால் அது பற்றி தெரிந்துகொள்ளவில்லை. வாதிகள் பெருமாள், தங்கதுரை, சின்னதுரை, இளஞ்சியம் ஆகியோர் சகோதர சகோதரிகளா என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதி வீரம்மாள் வாதி தங்கவேலின் அத்தையா என்றால் அது பற்றி தெரியாது. முத்துசாமி, குட்டியப்பன், வீரம்மாள் ஆகியோரின் தாயார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

2. எனது சொந்த ஊர் என்ன என்றால் எனது தகப்பனார், நான் கீழவெளியூரில் தான். அது தான் எனது சொந்த ஊர். எனக்கு தற்போது 65 வயதாகிறது என்பதால் எங்கள் ஊரில் உள்ள நபர்களை பற்றி நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது பாட்டனாரின் தகப்பனார் பெயர் தெரியாது. எனது பாட்டனாரின் தகப்பனார் யார்

யாரை வாரிசாக விட்டு இறந்தார் என்றால் அது பற்றி தெரியாது. எனது பாட்டனார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 55 வருடங்கள் இருக்கும். எனது பாட்டனார் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் கதவு எண்.5/46 ஆகும். நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து தாவா சொத்து சுமார் 50 அடி இருக்குமா என்றால் 200 அடி இருக்கும். சர்வே எண்.10G ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஏக்கர் 1.2 1/2 செண்ட் இருக்கும். மேற்படி நிலத்தில் 7 ½ செண்ட் நிலம் குறைவாக இருப்பதாக சொல்கிறேனா என்றால் ஆமாம். மேற்படி 7 ½ செண்ட் நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.11 ல் உள்ளது.

3. சர்வே எண்.11 ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் சர்வே எண்.11 ன் மொத்த விஸ்தீரணம் 38 ஏர்ஸ் என்று கூறுகிறார். கோவில் என நான் கூறும் பகுதி சர்வே எண்.11 ல் உள்ளதா என்றால் இல்லை. சர் வே எண்.11B ல் உள்ளது. என்ன கோவில் உள்ள பெரியகாண்டியம்மன் கோவில் உள்ளது. மேற்படி கோவிலுக்கு வடபுறம் வேறு கோவில் உள்ளதா என்றால் இல்லை. தென்புறம் தேசிய நெடுஞ்சாலை ரோட்டு புறம்போக்கில் பக்கத்தில் உள்ள கோவில் மதுரை வீரன் ஆகும். மேற்படி இரண்டு கோவில்கள் தவிர வேறு கோவில் எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.10 ஆனது அரசு கணக்கில் எவ்வளவு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் 10A முதல் 10G வரை உட்பிரிவு செய்துள்ளனர். 10A முதல் 10G வரை ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு அளவு ஒதுக்கப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.10A என்ற நிலத்திற்கு யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரோ, பின்னரோ வருவாய் துறையில் ஏதேனும் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் கிராம நிர்வாக அலுவலகத்தில் பார்த்தேன்.

4. நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் பார்க்கும் போது சர்வே எண்.10A முதல் 10G வரை யார் பெயரில் உள்ளது என கிராம நிர்வாக அலுவலரிடம் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். சர்வே எண்.10 ல் சார்பதிவாளர் அலுவலகத்தில் யார் பெயரிலாவது ஆவணம் உள்ளதா என பார்த்து

தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சர்வே எண்.10 ற்று எனது பெயரிலோ, எனது தந்தை பெயரிலோ, எனது பாட்டா பெயரிலோ எந்த ஆவணங்களும் ஏற்படவில்லை என்பதை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பத்திரங்கள் எதுவும் ஏற்படவில்லை, வாய்க்கரராக பிரித்து கொண்டோம். தாவா வழக்கு தாக்கல் செய்யும் போது சர்வே எண்.212/10 முருகாயி அம்மாம் என்பவரால் 21.11.1930 ல் கிரையம் வாங்கப்பட்டுள்ளது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதிகள் முருகாயி வழி சந்ததிகள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5. முருகாயி கணவர் பெயர் பழனியாண்டி என்றால் சரிதான். 1930 ல் தாவா சொத்துக்களும் பிற சொத்துக்களும் முருகாயி என்பவரால் கிரையம் வாங்கப்பட்டு, அவருக்கு பின்னர் அவரது சந்ததிகள் தொடர்ந்து அனுபவத்தில் இருந்து வரும் விவரம் எனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும் என்றால் சரியல்ல. UDR க்கு முன்னர் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள அ பதிவேடு பார்த்திக்கிறேனா என்றால் இல்லை. ஆலத்தூர் முத்துசாமி என்பவர் யார் என்றால் எனது பாட்டனார். சர்வே எண்.212/11 ஆலத்தூர் முத்துசாமி பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண்.11 ற்கு வாதிகள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.10G ல் ஜபம் நடக்கும் கூடம் உள்ளதா என்றால் உள்ளது. சாட்சி மீண்டும் 10C ல் உள்ளது என கூறுகிறார். தாவா சொத்தின் வடபுறம் கிணறு உள்ளதா என்றால் உள்ளது. அது சர்வே எண்.10D ல் உள்ளது. மேற்படி கிணறு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் முத்துசாமி மற்றும் குட்டியப்பன் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி கிணறு சர்வே எண்.10C ல் தான் உள்ளது, 10D ல் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.10A முதல் 10G வரை இடத்தை முருகாயின் வாரிசுகளான வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல.

6. கோவிலுக்கு நிலத்தை விட்டு விட்டு மீதமுள்ள நிலத்தை இரண்டாக பிரித்து கொண்டார்கள். கோவிலுக்கு மேற்குபுறம் உள்ள நிலத்தை தான் வாதிகள் பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அது எனது இடம் ஆகும். சர்ச் உள்ள இடம் சர்வே எண் 10G என்றால் சரிதான். சர்ச்சில் கீழே ஜபக் கூடம் மேலே வாதி தங்கவேலும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். 10D மற்றும் 10G ல் தவறுதலாக எனது தந்தை பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை மாற்ற கோரி தான் வருவாய் துறையில் மனு

கொடுத்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.10 ற்கு மேற்கே சர்வே எண்.9 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.9 ன் பட்டாதாரர் பெயர் தெரியுமா என்றால் அவர் பெயர் முத்துசாமி. மேற்படி முத்துசாமிக்கு சர்வே எண்.10 ல் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சர்வே எண்.10D ல் முத்துசாமி பெயர் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.10 ற்கு முத்துசாமிக்கு பட்டா வழங்கப்பட்டிருப்பது தவறு என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.10G ற்கு மாரியப்பன் பெயரில் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.212/10 ற்கும் ஆண்டியப்பன் மற்றும் செந்தா கவுண்டர் ஆகியோருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்10G மற்றும் 10D ல் வள்ளியம்மை, கருப்பாயி அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

7. எந்த காலத்திலும் நானோ, எனது முன்னோர்களோ சர்வே எண்10G மற்றும் 10D யை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய் துறையில் 212/10 யை உட்பிரிவு செய்த சமயத்தில் தவறுதலாக முத்துசாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ-3 ஆகியவை வருவாய் துறையில் ஏற்பட்ட தவறின் அடிப்படையில் ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வருவாய் துறையில் மனு கொடுத்து வருவாய் துறையினர் விசாரிக்கும் போது தான் எங்களுக்கே எனது தகப்பனார் பெயரில் தவறுதலாக பட்டா உள்ள விவரம் தெரியும் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் ஏற்பட்ட தவறை பயன்படுத்தி நானும், மற்ற பிரதிவாதிகளும் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறையினருக்கு எதிராக இந்த பட்டாவில் உள்ள பதிவை இரத்து செய்ய கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா சொத்து வாதிகளுக்கும் , 1, 2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. நான் வாதிகளுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடாது எனவும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர்களுக்கு கிடைக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளின் குடும்ப விவரங்கள், வாரிசு விவரங்கள் நன்கு தெரிந்து கொண்டு தான் எதுவும்

தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், 1, 2 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கும் முறைப்படி கிரைய பத்திரம் ஏற்பட்டு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் உரிமை மூலம் ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 1 , 2 பிரதிவாதிகள் வாதிகளுடன் ஒத்துழைக்காததால் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**